சாட்சிகளின் வாக்குமூலம்

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 353/2021**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

வாக்குமூலம் – வா.சா. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளைச்சாமி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 25.08.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஆகஸ்ட் 25ம் நாள் சாட்சியம்.

---

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கில் வா.சா.ஆ.2 ஆன சமரச தீர்ப்பில் வாதியாக இடம் பெற்றுள்ள வேலாத்தாள் எனது தாயார். வா.சா.ஆ.2க்கு முன்பாக இந்த வழக்கு சொத்திற்கு எந்த ஆவணங்களும் கிடையாது. அந்த வழக்கில் என்ன ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது. முருகாயி அம்மாள் என்பவர் எனது தாயாரின் அக்கா ஆவார். இந்த வழக்குச் சொத்து எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது. எனது தாயாரும், எனது தாயாரின் அக்காள் முருகாயி அம்மாள் என்பவரும் அ.வ.எண்.550/1986 என்ற வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் எனக்குத் தெரியாது. எனக்கு அடிப்படை ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் வா.சா.ஆ.2 ஆன தீர்ப்பினை சமரசமாக செல்வதாக நாங்கள் தாக்கல் செய்து பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

2. எனது அம்மா மற்றும் பெரியம்மா ஆகியோர்கள் பாகக்கறார் செய்த விவரம் எனக்குத் தெரியாது. எனது பெரியம்மாவிற்கு உள்ள உரிமையை மறைத்து நான் நீதிமன்றத்தில் தீர்ப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. ரீ.ச.எண்.195/1 காலையின் விஸ்தீரணம்

குறித்து எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் கிழகோட்டில் கிழுவன் வேலி உள்ளது. அந்த கிழுவன் வேலியில் சுமார் 50 பெரிய மரங்கள் உள்ளது என்றால் சரியல்ல. சுமார் 10, 15 மரங்கள் இருக்கும். அந்த வேலியானது வாதியாகிய எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பொதுவில் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு தனித்துப் பாத்தியப்பட்டது. எனக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதற்கு நான் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த வேலியானது பொதுவான வேலி என்றும் அந்த வேலியை அகற்றி விட்டு கம்பி வேலி அமைப்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3. வழக்குச் சொத்தினை பிரதிவாதிகள் அளப்பதற்கு முயற்சித்ததை நான் தடுத்து விட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வேலியானது பிரதிவாதிகள் பூமிக்குள் படர்ந்து உள்ளது என்றால் சரியல்ல. ரீ.ச.எண்.195/1 காலையில் எனக்கு 5 ஏக்கர் 9 செண்ட் பாத்தியப்பட்டது. 5 ஏக்கர் 9 செண்ட் எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும், இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. ரீ.ச.எண்.195/1 க்கு பழைய க.ச.எண் எனக்குத் தெரியாது.

<u>குறுக்கு விசாரணை முடிவடைந்தது</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.